**இந்திய வானிலைத் துறை & தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
**வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம், கோவை– 641 003.**
**மண்டல வாரியான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை – 11.03.2026**

### மாநிலத்தின் கடந்தவார வானிலை

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 31°செ முதல் 40°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 21°செ முதல் 26°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 21°செ முதல் 28°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 09°செ முதல் 10°செ ஆகவும் பதிவானது.

#### 1. மேற்கு மண்டலம்

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். அடுத்த ஐந்து நாட்களுக்கு மேற்கு தொடர்ச்சி மழையை ஒட்டிய பகுதிகளில் சில இடங்களில் இலேசான மழையும் மற்ற பகுதிகளில் வறண்ட வானிலையே எதிர்பார்க்கப்படுகிறது.. அதிகபட்ச வெப்பநிலை 33°செ முதல் 34°செ ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 21°செ முதல் 22°செ ஆகவும் காலை நேர காற்றின் ஈரப்பதம் 70-80 சதவிகிதமாகவும் மாலை நேர காற்றின் ஈரப்பதம் 35-40 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்று மணிக்கு 06-10 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. பெரும்பாலும் காற்று கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

### வேளாண் அறிவுரை

- மேற்கு மண்டலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் வரும் வாரத்தில் வறண்ட வானிலையுடன் காற்றானது மணிக்கு 8-12 கிமீ வரையிலும் வீசக்கூடும். காற்றின் வெப்பநிலையானது உயர்ந்து வருகின்றது. கோவை மாவட்டத்தில் மேற்குமலையடிவாரப்பகுதகளிலும் திருப்பூர் மாவட்டத்தின் ஓரிரு பகுதிகளிலும் தூறல் மழைக்கு வாய்ப்புள்ளது.
- தொடர்ச்சியான வறண்ட வானிலை நிலவுவதால் அனைத்து பயிர்களுக்கும் மண் ஈரத்தினைப்பொறுத்து நீர்பாசனம் செய்யலாம்.
- கோடை காலத்தில் கறவை மாடுகளுக்கு தேவைப்படும் பசந்தீவனங்களான தீவனச்சோளம் மற்றும் கம்பு நேப்பியர் ஒட்டு புல்லினை 30 சதவீதம் இறவை சாகுபடி பகுதியில் வளர்ப்பதன் மூலம் கோடையில் பால்மாட்டின் தீவன தேவையை பூர்த்தி செய்யலாம்.
- 45 முதல் 65 நாட்கள் வயதுடைய மக்காச்சோளப்பயிருக்கு போதிய நீர் பாசனம் செய்வதின் மூலம் தண்ணீர் பற்றாக்குறை காரணமாக அறுவடை காலத்தில் மகசூல் இழப்பு ஏற்படாமல் பாதுகாக்க முடியும். படைப்புழு தாக்கத்தை கட்டுபடுத்த குளோரான்டிரினில்புரோல் 18.50% எஸ்சி @ 150 மில்லி / ஹெ என்ற அளவில் தெளிக்கவும்.
- இறவை எள் பயிருக்கு வறண்ட வானிலை எதிர்பார்க்கப்படுவதால், கொத்து மற்றும் கை களை எடுத்து, பயிர்களை களைத்து மேலும் மூன்று நாள் கழித்து நீர் பாசனம் செய்யவும்.
- காய்கறிப்பயிர்களில் வெப்பநிலை சற்று உயர்ந்து வருவதால் சாறு உறிஞ்சும் பூச்சிகளின் தாக்குதல் குறிப்பாக தக்காளியில் காணப்படுகிறது. இதன் பரவலைத் தடுக்கும் வகையில் 5 சத வேப்பங்கொட்டைசாறு கரைசலினைத் தெளிக்க வேண்டும்.
- மல்லிகையில் வெப்பநிலை சற்று உயர்ந்து வருவதால் மொட்டு துளைப்பான் தாக்குதல் கூடுதலாக வாய்ப்புள்ளது. இதற்கு மேனோகுரோட்டோபாஸ் என்ற மருந்தினை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 மிலி வீதம் கலந்து தெளிக்கவும்.
- தென்னை மரத்தைச் சுற்றி உள் உற்சாய்வு வட்டவடிவ பாத்திகளை அமைப்பதன் மூலம் கோடை மழை நீரை வேர்பகுதிகளில் சேமிக்க முடியும்.

- வெப்பநிலை உயர்வாக காணப்படுவதால் கறவை மாடுகளுக்கு நாள் ஒன்றுக்கு தீவனத்துடன் 50 கிராம் டானுவாஸ் ஸ்மார்ட் தாது உப்புக்கலவையை அடர் தீவனத்துடன் கலந்து கொடுக்கவும். கால்நடைகளுக்கு தொடர்ந்து கோமாரி நோய் தடுப்பு ஊசி பக்கத்திலுள்ள கால்நடை மருத்துவமயில் போட்டுக்கொள்ளவும். மேலும் ஆடுகளுக்கு அம்மை நோய் தடுப்பு ஊசி போட்டுக்கொள்ளவும்.
- கோழிகளில் வெப்பநிலை சற்று உயர்ந்து வருவதால் வெப்ப அயற்சி ஏற்படுவதை தடுக்க கோழிப்பண்ணைகளில் இரு ஒரங்களிலும் நனைந்த சாக்கை கட்டிவிடவும்.

**2. காவிரி டெல்டா மண்டலம்**

காவிரி பாசன பகுதிக்கு உட்பட்ட மாவட்டங்களான தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், கரூர், பெரம்பலூர், அரியலூர், திருச்சி மற்றும் மயிலாடுதுறை ஆகிய இடங்களில் வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். 11.03.2026, 13-03.2026 மற்றும் 15.03.2026 ஆகிய தினங்களுக்கு லேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 30 - 35°செ ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 22 - 24°செ ஆகவும், காலைநேரகாற்றின் ஈரப்பதம் 80-85 சதவிகிதமாகவும், மாலை நேரகாற்றின் ஈரப்பதம் 60-90 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்று மணிக்கு 02 - 12 கி.மீ வேகத்தில் வீசக்கூடும். காற்று பெரும்பாலும் கிழக்கு மற்றும் வடகிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரை**

- நெல் தரிசு உளுந்து பயிரில் அதிக பனி மூட்டத்தின் காரணமாக சாம்பல் நோய் தாக்குதல் காணப்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த மழை நின்ற பின் ஏக்கருக்கு கார்பன்டெசிம் 100 கிராம் அல்லது நனையும் கந்தகத்துள் 1 கிலோ கைத்தெளிப்பான் கொண்டு காலை அல்லது மாலை வேளைகளில் தெளிக்கவும்.
- 5 மாத கரும்பில், காய்ந்த இலைகளை உரித்து மண்ணின் மேற்பரப்பில் போர்வை போல் பரப்பி மண் ஈரபதத்தை பாதுகாக்கவும்.
- கால்நடைகளுக்கு 3 மாத வயதுடைய கன்று குட்டிகள் மற்றும் 2 மாத வயதுடைய ஆட்டு குட்டிகளுக்கு கோமாரி நோய் வராமல் தடுக்க தடுப்பூசி போடவும்.

**3. தெற்குமண்டலம் -1**

தெற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான தூத்துக்குடி, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் தென்காசி மாவட்டங்களில் அடுத்த ஐந்து நாட்களுக்கு இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. வானம் ஓரளவு முதல் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 32-36°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 21-25°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 60-90 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 30-82 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் மணிக்கு 02-12 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என்றும் காற்று பெரும்பாலும் கிழக்கு, வடகிழக்கு திசையில் இருந்து வீசும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ஐந்து நாட்களுக்கு மழை பெய்ய வாய்ப்புள்ளது. அனைத்து பயிர்களுக்கும் உள்ளூர் வானிலை நிலவரத்திற்கு ஏற்ப மருந்து தெளிப்பு மற்றும் நீர் பாய்க்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.
- எலுமிச்சையில் பழங்களை அறுவடை செய்து நன்முறையில் பாதுகாத்து பழங்களின் தரத்தையும் பாதுகாத்து நாட்களையும் அதிகரிக்கவும்.

**தெற்கு மண்டலம் -2**

வரும் நாட்களில் மதுரை, சிவகங்கை, தேனி, புதுக்கோட்டை, திண்டுக்கல், இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் வானம் மிதமாக மேகமூட்டத்துடன் காணப்படும். அடுத்த ஐந்து நாட்களுக்கு மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் இலேசான மழை எதிர்ப்பார்க்கப்படுகிறது. அதிகபட்சவெப்பநிலை

**33-36°செ** ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை **20-25°செ** ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் **60-90** சதவிகிதமாகவும் மற்றும் மாலை நேர காற்றின் ஈரப்பதம் **30-70** சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் மணிக்கு 08-12 கி.மீ வேகத்தில் வீசக்கூடும். பெரும்பாலும் காற்று வட கிழக்கு மற்றும் தென் கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

### வேளாண் அறிவுரை

**நெல்**

*நெல் பயிரைக் தாக்கும் குருத்து ஈக்களின் தாக்குதல் பரவலாக தென்பட வாய்ப்புள்ளது. இவ்வகை ஈக்களின் தாக்குதலால் நெற்பயிரில் மஞ்சள் கலந்த வெள்ளை நிற நீளவாட்டு கொப்பளங்கள் துளையுடன் காணப்படும். இலைகள் சுருங்கி பயிர்கள் வளர்ச்சி குன்றியும், இளம் இலைகளின் நுனிப்பகுதி கீழ்ப்புறமாக தொங்கியும் காணப்படும். வயல்களில் மாற்று சார்பு செடிகளை அகற்ற வேண்டும், பரிந்துரைக்கப்பட்ட சாம்பல் சத்து உரத்தை இடவேண்டும். மேலும் ஒரு ஏக்கருக்கு **350** மில்லி என்ற அளவில் புப்ரோபெசின் என்ற பூச்சிக்கொல்லியை தெளித்து கட்டுப்படுத்தலாம்.*

**மா**

*மா மரத்தில் பிஞ்சு கொட்டாமல் தடுத்து நல்ல மகசூல் பெறுவதற்கு மா நுண்ணூட்டக் கலவை லிட்டருக்கு **5** கிராம் என்ற அளவில் ஷாம்பு மற்றும் எலுமிச்சை சாறுடன் கலந்து இலை வழி தெளிப்பு செய்ய வேண்டும்.*

**கரும்பு**

*கரும்பு பயிரில் நுண்ணூட்டச் சத்து பற்றாக்குறை பரவலாக தென்படுகிறது. இதனை போக்கி மகசூலை அதிகரிக்க செய்ய "கரும்பு பூஸ்டரினை" நடவு செய்து **45** நாட்கள் கழித்து ஏக்கருக்கு **1** கிலோ என்ற அளவிலும், **60** நாட்கள் கழித்து, ஏக்கருக்கு **1.5** கிலோ என்ற அளவிலும், **75** நாட்கள் கழித்து ஏக்கருக்கு **2** கிலோ என்ற அளவிலும் தெளிக்க வேண்டும். **200** லிட்டர் தண்ணீரில் ஒட்டும் திரவத்துடன் கலந்து இலை வழியாகத் தெளிக்க வேண்டும்.*

**வாழை**

*வாழை நடவு செய்துள்ள விவசாயிகள் வாழை ரிச் என்ற வளர்ச்சி ஊக்கியை ஒரு லிட்டர் தண்ணீருக்கு **5** கிராம் என்ற அளவில் எடுத்து அதனுடன் சிறிய சாம்பு பாக்கெட் மற்றும் எலுமிச்சைச் சாறு கலந்து நடவு செய்த மூன்று மாதத்திற்கு பின் தொடங்கி குழை ஈனும் காலம் வரை ஒரு மாத கால இடைவெளியில் தொடர்ந்து தெளிக்க வேண்டும்.*

**தென்னை**

*நிலவும் பருவச்சூழ்நிலையில் தென்னையில் சிவப்புக் கூண் வண்டு தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. இவ்வண்டின் தாக்குதலால் மரத்தில் ஓட்டைகளும், ஓட்டைகள் வழியே திசுக்களைத் தின்ற பின் வெளியே தள்ளப்பட்ட மரத்தின் நார்களும் காணப்படும். புழுக்கள் உட்சென்ற சிறிய துவாரத்தின் வழியே சிவப்புநீர் வடிந்து காய்ந்த பிசின் காணப்படும். மரத்தின் தண்டுப் பகுதியில் கூர்ந்து கவனிதத்தால், புழுக்கள் இரையும் சப்தம் கேட்கும். தாக்குதல் அதிகரிக்கும் நிலையில் மரத்தின் உட்புற ஓலைகள் மஞ்சள் நிறமாக மாறுகின்றன. அத்துடன் கொண்டைப் பகுதி முறிந்து விடுவதால் மரமானது பட்டு விடும். இதனைக் கட்டுப்படுத்த ஒரு எக்டேருக்கு ஒன்று என்ற எண்ணிக்கையில் பெரமோன் பொறி வீதம் வைக்க வேண்டும். (அதாவது **5** லிட்டர் வாளி ஒன்றில் **3** லிட்டர் தண்ணீர், **2** கிலோ ஆமணக்கு பிண்ணாக்கு, **2** அழுகிய வாழைப்பழம், **2** அன்னாசிப் பழ துண்டு மற்றும் **100** கிராம் சர்க்கரை சேர்த்து) வைக்க வேண்டும். அல்லது ஒரு மரத்திற்கு **100** மில்லி தண்ணீருக்கு **10**மில்லி என்ற அளவில் புரோபன்னோபாஸ் மருந்தினை கலந்து வேர் வழி ஊட்டமாக கொடுக்க வேண்டும்.*

**உளுந்து**

*நெல் தரிசில் பயிரிட பட்ட உளுந்து பயிரில் சாறு உறிஞ்சும் பூச்சிகளான தத்துப்பூச்சி, இலைப்பேன், அசுவினி மற்றும் வெள்ளை ஈ தாக்க வாய்ப்புள்ளது. இதனை கட்டுப்படுத்த அசாடிராக்டின் **0.03** சதம் ( **3** மில்லி ) எண்ணிக்கை அதிகமாக இருக்கும் போது டிரைசோபாஸ் **40** இ.சி ( **2 ½** மி.லி ) ஒட்டும் திரவத்துடன் கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம்.*

**தக்காளி**

*தக்காளிப் பயிரில் வெள்ளை ஈக்களின் தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. வெள்ளை ஈக்களின் தாக்குதலால் இலையின் மேற்பரப்பில் வெளிர்பச்சை நிற புள்ளிகள் காணப்படும். இலைகள் மஞ்சளாக மாறும், இலைகள் அடிப்புறத்தில் சுருண்டு பிறகு காய்ந்து விழுந்துவிடும். இதனைக்*

கட்டுப்படுத்த 10 லிட்டர் தண்ணீருக்கு 6 கிராம் என்ற விகிதத்தில் அசிட்டமிபிரைடு மற்றும் 10மில்லி ஒட்டும்பசை கலந்து தெளிக்கவும்.

**கத்தரி**

காய்கறிப் பயிர்களில் வேர் முடிச்சு மற்றும் மொச்சை வடிவ நூற்புழுக்களின் தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. செடிகளுக்கு போதிய அளவு நீர் மற்றும் உரம் இட்டிருந்தாலும் பகல் நேரங்களில் வாடிக் காணப்படும். வேர் பகுதிகளில் வேர் முடிச்சுகள் காணப்படும். இதனை கட்டுப்படுத்த எக்டருக்கு 400 கிலோ வேப்பம் பிண்ணாக்கு இட வேண்டும். கேந்திப்பூ (செண்டுமல்லி) பயிரை ஊடுபயிராக பயிர் செய்ய வேண்டும். மேலும் ஒரு எக்டருக்கு 2½ கிலோ பர்புரியோசிலியம் லில்லாசினம் என்ற உயிரினக் கலவையை 100 கிலோ தொழுஉரத்துடன் கலந்து நீர் தெளித்து நிழலில் வைத்து 15 நாட்களுக்கு பிறகு காலை, மாலை நேரங்களில் வயலில் இடவேண்டும்.

**வெண்டை**

தற்போது நிலவும் தட்பவெப்ப சூழ்நிலையில் வெண்டை பயிரைத் தாக்கும் இலைச்சுருட்டுப்புழு பரவலாக தென்பட வாய்ப்பு உள்ளது. சேதத்தின் அறிகுறிகளாக இலைகள் புழுவின் உமிழ்நீர் கொண்டு நூலினால் சுருட்ட பட்டிருக்கும். அதன் உள்ளே புழு இருந்து கொண்டு பச்சையத்தை சுரண்டித் தின்னும். செடியில் உள்ள இலைகள் அனைத்தும் உதிர்ந்தது போல் தோற்றமளிக்கும். இதனை கட்டுப்படுத்த சுருண்டு இருக்கும் இலைகளை சேகரித்து அழிக்கவும். ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 மி.லி என்ற அளவில் ஃபாசலோன் கலந்து தெளிக்கவும்.

**மிளகாய்**

மிளகாய் பயிரைத் தாக்கும் புகையிலை வெட்டுப்புழுவின் தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. இதன் முட்டையிலிருந்து வெளிவரும் புழுக்கள் இலையின் பச்சையத்தை சுரண்டி சாப்பிடும் இலைகளை சல்லடை போல் அரித்து வெள்ளை நிறத்தில் இலையின் நரம்புகள் மட்டும் இருக்கும் வளர்ந்த புழுக்களின் தாக்குதல் தீவிரமானால் செடி முழுவதையும் கண்டபடி சாப்பிடும். இதனை கட்டுப்படுத்த வயல் வரப்பு ஓரங்களில் ஆமணக்கை கவர்ச்சிப் பயிராக பயிரிட வேண்டும். இதனை தடுக்க வயலை உழுது மண்ணில் புதைந்துள்ள கூட்டுப்புழுக்களை வெளிக்கொணர்ந்து அழிக்க வேண்டும். ஹெக்டேருக்கு 15 இனக்கவர்ச்சிப் பொறி வைத்து ஆண் அந்துப் பூச்சிகளை கவர்ந்து அழிக்கலாம். மேலும் 1 லிட்டர் தண்ணீருக்கு 2 கிராம் தையோடைகார்ப் அல்லது 10 லிட்டர் தண்ணீருக்கு 7½ மில்லி நோவல்லுரான் 10சதம் இவற்றில் ஏதேனும் ஒன்றை தெளித்து கட்டுப்படுத்தலாம்

**நிலக்கடலை**

பூக்கும் தருணத்தில் நீர் பற்றாக்குறை உள்ள இடங்களில் நிலக்கடலை பயிருக்கு பூப்பின் போதும், காய் உருவாதலின் போதும் 0.5 சதவிகிதம் பொட்டாசியம் குளோரைடு தெளிப்பதன் மூலம் நீர் தட்டுப்பாட்டை குறைக்கலாம்.

**மக்காச்சோளம்**

மக்காச்சோளப் பயிரில் காணப்படும் ஊட்டச்சத்து பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய பயிர்களுக்கு தேவையான நுண்ணூட்டச்சத்தினை கொடுக்க வேண்டும். தற்போது மக்காசோளம் நடவு செய்துள்ள விவசாயிகள் ஒரு ஏக்கருக்கு 5 கிலோ சிறுதானிய நுண்ணூட்டம் அல்லது 10 கிலோ சிங்க்சல்பேட் நுண்ணுரத்தினை கொடுப்பதன் மூலம் நுண்ணூட்டசத்து குறைபாட்டை நிவர்த்தி செய்யலாம். மேலும் மக்கிய தொழு உரத்துடன் ஒரு ஏக்கருக்கு 2கிலோ அசோஸ்பைரில்லம் 2 கிலோ பாஸ்போ பாக்டீரியாவை கலந்து இட வேண்டும்.

**மல்லிகை**

மல்லிகை பூப்பயிரில் தண்டு மற்றும் வேர் அழுகல் தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. நோய் தாக்குதலின் அறிகுறியாக தாவரங்களின் எல்லா நிலைகளிலும் தொற்று ஏற்படும். முதலில் முதிர்ந்த இலைகள் மஞ்சள் நிறமாக மாறும் பின் இளம் இலைகள் மஞ்சளாகும். இறுதியில் தாவரம் இறந்து விடும். மேலும் வேர் பகுதியில் கருப்பு நிறமாற்றம் தென்படும். இதனைக் கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு 1 கிலோ என்ற அளவில் டிரைக்கோடெர்மா விரிடியினை தண்ணீரில் கலந்து தூர் பகுதி நன்கு நனையும் படி ஊற்றவும். மேலும் ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2½ கிராம் என்ற அளவில் காப்பர் ஆக்சிகுளோரைடு மருந்தினை கலந்து இலை வழியாக தெளிக்க வேண்டும்.

**கால்நடை**

வெப்பமான பருவசூழ்நிலையில் கால்நடைகளுக்கு சுவாசக்கோளாறு, வாய்வழியாக சளி வெளியேற்றம் போன்ற பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. இவற்றிலிருந்து விவசாயிகள்

தங்களின் மாடுகளை பாதுகாக்க கருப்பட்டி, வெங்காயம், சீரகம் இவை மூன்றிலும் சமஅளவு எடுத்து உரலில் ஆட்டி உருண்டையாக உருட்டி, காலை மாலை என இரு வேளைகளிலும் கொடுக்க வேண்டும்.

**4. மலைப்பிரதேச மண்டலம்**

மலைப்பிரதேச மண்டலமான நீலகிரி மாவட்டத்தில் வரும் நாட்களில் வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். முதல் நாளில் மிக லேசான மழையும், அடுத்த நான்கு நாட்களுக்கு மழை பெய்ய வாய்ப்பில்லை என எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை **21-22°**செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை **08-09°**செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் **80-85** சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் **60-65** சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் மணிக்கு **04-08** கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- குருமிளகு வாடல் நோயைக் கட்டுப்படுத்த, ஒரு செடிக்கு டிரைக்கோடெர்மா அஸ்பெரெல்லாம் , அல்லது பேசிலஸ்சப்டிலிஸ் ஃ **25** கிராம் மற்றும் வேப்பம் பிண்ணாக்கு **500** கிராம் இடலாம். மழை இல்லாத நேரங்களில் இட வேண்டும்.
- கேரட் பயிரில் துருஈ மேலாண்மை விதைத்த **45 - 50** நாட்களில் ஒரு ஏக்கருக்கு **4** கிலோ குளோரான்ட்ரானிலிப்ரோல் என்ற குருணை மருந்துகளை, மழை இல்லாத நேரங்களில் மண்ணில் இட வேண்டும்.
- பூண்டு பயிரில் ஃபுசேரியம் அழுகல் நோயைக் கட்டுப்படுத்த, கார்பென்டசிம் @ **1**கிராம்/லி அல்லது காப்பர் ஆக்ஸிகுளோரைடு @ **2.5** கிராம்/லிஎன்ற அளவில், மழை இல்லாத நேரங்களில் மண்ணில் ஊற்ற வேண்டும்.
- பீட்ரூட் பயிரில் செர்கோஸ்போரா இலைப் புள்ளியை நிர்வகிக்க, • பாதிக்கப்பட்ட செடிகளை அகற்றி அழிக்க வேண்டும். • பயிர் சுழற்சி முறையை மேற்கொள்ள வேண்டும். • காப்பர் ஆக்ஸிகுளோரைடு 0.3% 15 நாட்கள் இடைவெளியில் மூன்று முறை மழை இல்லாத நேரங்களில் தெளிக்க வேண்டும்.

**தேயிலையில் கொப்புள கருகல் நோய் மேலாண்மை முறைகள்**

- பாதிக்கப்பட்ட இலைகள் மற்றும் தளிர்களை கவாத்து மூலம் நீக்கி அழிக்கவும்.
- ஹெக்ஸகோனசோல்@ 200 மிலி + காப்பர் ஆக்ஸிகுளோரைடு @ 210 கிராம்/ எக்டருக்கு 5 நாட்கள் இடைவெளியில் (அல்லது) காப்பர் ஆக்ஸிகுளோரைடு @ 210 கிராம் + புரோபிகோனசோல் @ 200 மிலி/ எக்டருக்கு 10 நாட்கள் இடைவெளியில் தெளிக்கவும்
- எளிதில் நோய் பாதிக்கக் கூடிய ரகங்களை தவிர்த்து, நோய் எதிர்ப்பு ரகங்களை யிரிடவும்

**மத்திய பூச்சிக்கொல்லி வாரியப் பரிந்துரைகள்**

பின் வரும் மருந்துகளில் ஏதேனும் ஒன்றை தெளிக்கவும.

- ஹெக்ஸகோனசோல் 5% EC @ 200ml/ha (அல்லது)
- ப்ரோபிகோனசோல் 25% EC @ 125-250ml/ha (அல்லது)
- கார்பென்டாசிம் 12%+ மான்கோசெப் 63% WP @ 1250g/ha (அல்லது)
- ஹெக்ஸகோனசோல் 4% + ஜினெப் 68% WP @ 625g/ha.

**5. வட மேற்கு மண்டலம்**

வரும் நாட்களில் வடமேற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சேலம், நாமக்கல், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் வானம் பெரும்பாலும் தெளிவாக காணப்படும் மற்றும் மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் **15.03.2026** லேசான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை **34°**செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை **22°**செ ஆகவும், காற்றின் ஈரப்பதம் **35-70**

சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 06-10 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் காற்று கிழக்கு மற்றும் வடகிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரை**

- தற்போது நிலவி வரும் தட்பவெப்ப சூழ்நிலையில் கத்தரியில் **காய்ப்புழு** தாக்குதல் தென்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த, பாதிக்கப்பட்ட செடிகளை நுனியை கிள்ளி விட வேண்டும். இனக்கவர்ச்சி பொறி ஏக்கருக்கு 5 வீதம் வைத்து தாய் ஆண் அந்துபூச்சிகளை தொடர்ந்து கண்காணிக்க வேண்டும். பொருளாதார சேத நிலை தாண்டும் போது வேப்பங்கொட்டை கரைசல் 5 சதவீதம் தெளிக்க வேண்டும் அல்லது ஸ்பைனோடூரான் ஒரு லிட்டர் தண்ணீருக்கு 1 மில்லி என்ற அளவில் கலந்து தெளித்து காய்புழுக்களை கட்டுப்படுத்தலாம்.
- புதியதாக நடவு செய்துள்ள மரவள்ளி பயிரில் தற்போது நிலவி வரும் தட்பவெப்ப சூழ்நிலையில் வேர் அழுகல் நோய் தென்படுகிறது. எனவே இதனைக் கட்டுப்படுத்த, செடியின் வேரில் எதிர் உயிர் பூஞ்சாணக்கொல்லிகளான *பேசில்லஸ் சப்டிலிஸ்* 1 லிட்டர் தண்ணீருக்கு 5 கிராம் மற்றும் *டிரைக்கோடெர்மா விரிடி* 1 லிட்டர் தண்ணீருக்கு 5 கிராம் என்ற அளவில் கலந்து 7 நாட்கள் இடைவெளியில் இரண்டு முறை ஊற்ற வேண்டும்.
- தற்போது கோடைக்காலம் துவங்க இருப்பதால் வெண்டை சாகுபடி செய்துள்ள விவசாயிகள் விளைச்சலை அதிகரித்து நல்ல மகசூல் பெற லிட்டருக்கு 5 கிராம் என்ற அளவில் **காய்கறி நுண்ணூட்ட கலவையுடன்** ஒட்டும் திரவம் கலந்து நட்ட 30 நாள் முதல் 15 நாட்கள் இடைவெளியில் இலைவழி தெளிப்பு செய்ய வேண்டும்.

**கால்நடை ஆலோசனைகள்**

- கால்நடைகளை கோடை வெப்பத்தில் இருந்து காக்க நல்ல காற்றோட்டம் உள்ள கொட்டகைகள் மற்றும் மர நிழல்களில் அவற்றை பராமரிக்க வேண்டும்.
- கொட்டகையின் மேற்கூறையின் மீது தென்னங்கீற்று அல்லது வைக்கோல் பரப்பி அதன்மீது தண்ணீர் தெளிப்பதன் மூலம் வெப்பதாக்கத்திலிருந்து கால்நடைகளை பாதுகாக்கலாம்.
- மேய்ச்சல் நிலங்களில் ஏற்படும் மேய்ச்சல் பற்றாக்குறை காரணமாக பயிர்க்கழிவுகள், மரவள்ளி தழைகள், வெங்காயப் பயிர்க் கழிவுகள், வாழை இலைகள் மற்றும் தண்டுகள் போன்றவற்றை அவசர காலங்களில் தீவனமாக அளிக்கலாம்.
- கறவை பசுக்களில் ஒரு பசுவுக்கு நாள் ஒன்றுக்கு 30 - 50 கிராம் என்ற அளவில் அடர் தீவனத்துடன் தானுவாஸ் தாது உப்பு கலவையினை அளிக்கவும்.
- நாட்டுக்கோழிகள் தீவிர முறையில் வளர்க்கப்படும் இவ்வெப்பக் காலத்தில் அதிக பாதிப்படையும்.
- ஒன்றையொன்று கொத்திக் கொண்டும், தீவனம் எடுக்காமல் வளர்ச்சி குறைந்தும் காணப்படுவது இயல்பு.
- இடவசதியை அதிகரித்து தீவனத்தில் நார்ச்சத்து (2 %வரை) மற்றும் தாவர எண்ணெய் (4 - 5 கிலோ / டன்)ஆகியவற்றை சேர்த்து கொடுப்பதால், கோழிகளில் இறப்பையும். வளர்ச்சிக் குறைபாடுகளையும் நன்கு குறைக்கலாம்.

**6. வடகிழக்கு மண்டலம்**

வரும் நாட்களில் வடகிழக்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவண்ணாமலை, திருவள்ளூர், கடலூர், வேலூர், ராணிபேட்டை, திருப்பத்தூர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி ஆகிய மாவட்டங்களில் வாரம் வாரத்தில் வானம் தெளிவாக காணப்படும். பகல்நேர வெப்பநிலை 30°செ முதல் 36°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 21°செ முதல் 24°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காலை நேர காற்றின் ஈரப்பதம் 68-90 சதவிகிதமாகவும் மாலை நேர காற்றின் ஈரப்பதம் 50-80 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரி காற்றின் வேகம் 01-

12 கி.மீ ஆகவும் பெரும்பாலும் தென் கிழக்கு மற்றும் வட கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரைகள்**

- தற்பொழுது நிலவி வரும் வானிலையின் காரணமாக நெற்பயிரில் இலைச்சுருட்டுப்புழு மற்றும் தண்டுத்துளைப்பான் தாக்கம் காணப்படுவதால் அதை கட்டுப்படுத்த கார்போசல்பான் 400 மி.லி/ஏக்கர் அல்லது கார்டாப்ஹைட்ரோகுளோரைடு 600 கி/ஏக்கர் என்ற அளவில் காலை அல்லது மாலை நேரத்தில் தெளிக்கவும்.
- தற்பொழுது நிலவி வரும் வானிலையின் காரணமாக நெற்பயிரில் ஆனைக்கொம்பன் ஈதாக்கம் காணப்படுவதால் அதை கட்டுப்படுத்த குளோரோபைரிபாஸ் 20% EC 500 மி.லி / ஏக்கர் அல்லது பாசலான் 35 EC 600 மி.லி/ஏக்கர் என்ற அளவில் தெளிக்க வேண்டும்.
- தற்பொழுது நிலவி வரும் வானிலையின் காரணமாக நெற்பயிரில் புகையான் தாக்கம் அதிகமாக காணப்படுகிறது. இதன் அறிகுறிகள் நீர்மட்டத்திற்கு மேலிருக்கும் பயிரின் அடிப்பகுதியில் இளங்குஞ்சுகள் மற்றும் முதிர்பூச்சிகள் ஒட்டிக்கொண்டிருக்கும். இவைகள் தண்டின் அடியில் சாற்றினை உறிஞ்சுகின்றன. தாக்கப்பட்ட பயிர்கள் முற்றிலும் காய்ந்து “தீய்ந்தமாதிரி“ காட்சியளிக்கும்.
- நெற்பயிர்கள் பால் பிடிக்கும் முன் கதிர் காய்ந்து பதராகிவிடும். மேலும் பயிர்கள் சாய்ந்து விடும். இதை கட்டுப்படுத்த டைனோட்ஃபுரான் 20 SG @ 80 கிராம்/ஏக்கர் அல்லது பைமெட்ரோசின் 50% WG 120 கிராம் / ஏக்கர் அல்லது தயாமீதாக்ஷம் 25% WG @ 40கிராம் / ஏக்கர் என்ற அளவில் ஒட்டும் திரவம் கலந்து தெளிக்க வேண்டும்.
- வாழையில் வாடல் நோயை கட்டுப்படுத்த பேசில்லஸ் சப்டிலிஸ் மற்றும் ட்ரைக்கோடெர்மா விரிடி 1 கிலோ / ஏக்கர் இட வேண்டும் அல்லது பேசில்லஸ் சப்டிலிஸ் 5 மி.லி / லிட்டர் ஊற்ற வேண்டும்.
- விவசாயிகள் தென்னையை தாக்கும் சுருள் வெள்ளை ஈயை கட்டுப்படுத்த வேப்ப எண்ணெய் 3% தண்ணிரீல் கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம்.

**கால்நடை ஆலோசனைகள்**

- இனப்பெருக்கத்திற்கு தயார் நிலைக்கு இருக்கும் பெட்டை ஆடுகளுக்கு தரமான குட்டிகளை ஈனும் பொருட்டு இனப்பெருக்கத்திற்கு முன் புரதச்சத்தும் மாவுச்சத்தும் தாதுஉப்பு மற்றும் வைட்டமின்கள் நிறைந்த கலவையை கொடுக்க வேண்டும்.
- கோழிகளுக்கு அளிக்கப்படும் நீர் சுத்தமாகவும் சுகாதாரமாகவும் இருக்க வேண்டும், மேலும் ஏதேனும் நச்சுக்கள் உள்ளதா என்பதை தரக்கட்டுப்பாடு ஆய்வுக்கு உட்படுத்திய பின் அனுமதிக்க வேண்டும்.
- கறவை மாடுகளில் பால் உற்பத்தியைப் பெருக்க தீவனத்தில் தாது உப்புக்கலவை கலந்து கொடுக்க வேண்டும்.
- மேய்ச்சலுக்கு விடப்படும் ஆடுகளில் தாடை வீக்கம் மற்றும் வெளிறிய கண் இருப்பின் தவறாமல் ஒட்டுண்ணியியல் மருந்து அளிக்க வேண்டும்.
- இந்த மாதம் செம்மறி ஆடுகளை இனப்பெருக்கத்திற்கு அனுமதிக்கலாம்.
- ஆடு மாடு குறிப்பாக ஆடுகளை சூரியன் உதித்து சற்று பனி காய்ந்த நிலையில் மேய்ச்சலுக்கு விடவும்.

**7. அதிக மழை பெறும் மண்டலம்**

எதிர் வரும் ஐந்து நாட்களில் குறைவான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்சவெப்ப நிலை 32 - 33$^{0}$ செ ஆகவும், குறைந்த பட்ச வெப்ப நிலை 23 - 24$^{0}$செ ஆகவும், வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். காலை நேர காற்றின் ஈரப்பதம் 70 - 75 % பதிவாக

வாய்ப்புள்ளது. மதியம் நேர ஈரப்பதம் 72 - 73 % பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் மணிக்கு 08 - 12 கி.மீ வேகத்தில் கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரைகள்**

- தென்னையில் நீர் பாய்ச்சுவதால் பெண் பூக்கள் உற்பத்தியை மற்றும் காய் பிடிப்பையும் அதிகரிக்கலாம்.
- குலை தள்ளிய வாழை மரங்களுக்கு காற்றின் வேகம் (மணிக்கு 08 - 12 கி.மீ) அதிகமாக இருப்பதால் மூங்கில் அல்லது சவுக்கு குச்சிகள் கொண்டு முட்டு கொடுக்கவும்.
- மழை மிக குறைவாக இருப்பதால் கிராம்பு மரங்களுக்கு நீர் பாய்ச்சவும்.
- அன்னாசி வயல்களில் மூடாக்கு இடுவதன் மூலம் மண் ஈரப்பதம் வீணாகாமல் தடுக்கலாம்.
- மல்லிகை மொட்டுகளை காலை நேரங்களில் அறுவடை செய்யவும்.
- காய்க்கும் தென்னை மரங்களுக்கு 6 மாதங்களுக்கு ஒரு முறை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக தென்னை டானிக் மரம் ஒன்றிற்கு 200 மில்லி வீதம் வேர்வழியாக அளிக்கவும்.
- புதிதாக நடவு செய்யப்பட்ட பழவகை மற்றும் தோட்டக்கலைப் பயிர்களுக்கு வரும் நாட்களில் குறைவான மழை இருப்பதால், நீர் பாய்ச்சவும்.

**பேராசிரியர் மற்றும் தலைவர்**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.வே.ப.க., கோவை**